முருகப்பெருமான் துணை

**மகான் இராமானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.12.2023,** வியாழக்கிழமை

1. வள்ளலே வாழும் ஞானியே
வரமென அரங்கன் நீ தரும்
வல்லமையான ஞான வழிகளை
வணங்கி உலகோர் ஏற்றுவர
2. வருகவே உலகம் நலம் பெறுமென
வாழ்த்தியே துல்லிய ஆசிதனை
கருதியே சோபகிருது சிலை திங்கள்
கணக்காய் விய திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 12 ம் நாள், 28.12.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் இராமானந்தர் யானும்
வையகம் சிறப்புற உரைப்பேன்
சோரமில்லா ஞானவான்கள் படை
சுத்தநெறி கொண்டு அரங்கன் அமைக்க
4. அமைக்கவே உலகமக்கள் ஏற்று
அரங்கமகான் ஆசி அருள் கூடி
நேமமுடன் தன்னார்வத் தொண்டை
நிலவுலகம் எங்கிலும் பெருக்கி
5. பெருக்கியே கலியின் இடர்விரட்டி
பேதம் இல்லா ஞான சமூகம்
கருத்தாக உருவாக்கி இனிதே
கலியினில் ஞானயுகம் படைப்பர்
6. படைப்பர் தரும சாலை பல
பசிபிணி விரட்டும் வண்ணம்
படைத்துமே உலகம் எங்கிலும்
பாருலகில் பரோபகாரம் நிறைந்த

7. நிறைந்த சூழல் கனிந்திட
நீதி நெறி பின்பற்றும் வண்ணம்
மறை போற்றும் மக்கள் சமூகம்
மரணம் வெல்லும் தேடலாகி

8. தேடலாகி அரங்க மகானின்
தெய்வீக நெறிவழி ஈடுபட
தடையற சித்திகள் கூடி
தரணியோர் ஞானிகளாவர்

9. ஆகவே நல்லத் தலைமை
ஆற்றல் மிக்க ஞானத்தலைமை
செகமெங்கும் அமையும்படி
சிறப்பான சேவை ஆற்றி

10. ஆற்றியே அரங்கன் அவதார
ஆற்றல் மிக்க ஞான ஆட்சியை
மாற்றமாக கலியுக மக்கள் தானும்
மனமுவந்து ஏற்கும்படி இனிதே

11. இனிதே நல்லாட்சி படைப்பர்
இணையிலா ஞான ஆட்சியாக
கனிவேலவனை வணங்கிவர
கலியுகத்தில் மாற்றம் நிகழும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—